யுத்தக்குதிரை ஊழியங்கள்



BATTLE HORSE MINISTRIES

February, 2026

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே...

துதி, கனம், மகிமை எல்லாம் தேவனுக்கே. கடந்த மாதத்தில் எத்தனையோ கஷ்டமான சூழ்நிலைகள், எத்தனையோ பிரச்சனைகள் இருந்த போதிலும் நம்மை விஷேசமாய் காத்து வழிநடத்திய தேவனுக்கு நன்றி கூறுவோம். இந்த மாதத்தைக் காணக்கூடிய கிருபையை நமக்கு அளித்தார். தேவனுக்குள் வளர இந்த மாதத்தில் நீங்கள் எடுத்திருக்கும் தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனிடம் ஜெபிப்போம். இந்த மாதத்திலும் இந்த இதழை நிறைவு செய்து அனுப்ப உதவி செய்தார் அதற்கு நன்றி கூறுகிறேன். இந்த இதழின் செய்திகளும், கதைகளும் உங்களோடு கூட பேசும் உங்களுக்கு உபயோகமாக இருக்கும் என்று விசுவாசிக்கிறேன்.

ஜெபம்

அன்புள்ள தகப்பனே, கடந்த மாதத்தில் எங்களை ஒரு குறைவுமின்றி காத்து வழிநடத்தினீர், நன்றி கூறுகிறோம் ராஜா.இந்த மாதத்தில் எங்கள் மூலம் அனேக ஆத்துமாக்கள் சந்திக்கும்படியான சூழ்நிலைகளை எங்களுக்குத் தாரும். ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், ஆசிரியர்கள், காவல்துறை அதிகாரிகள், தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும் பாதுகாத்து ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம் தகப்பனே. இந்த புதிய மாதத்திலும் எங்களுடைய தேவைகள் சந்திக்கப்பட்டு, கவலைகள், துக்கங்கள் தீர்ந்து, எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும்படியான வாழ்க்கையைத் தரும்படியாக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், இந்த மாத செய்திகள், கதைகள் அனைத்தும் வாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் பிரயோஜனமாக இருக்கும்படியாக அமைய ஜெபிக்கிறோம். ஜெபம் கேளும் நல்ல தகப்பனே.

ஆமென்.

கட்டளைகள்

இன்னைக்கு சின்ன குழந்தைகள்ல இருந்து பெரியவங்க வரை எல்லாருக்கும் பிடிச்ச ஒரு விளையாட்டுப் பொருள் எதுன்னு பார்த்தா, அது ரிமோட் கண்ட்ரோல் கார். ஏன் அது எல்லாருக்கும் பிடிக்குது? நாம சொல்ற பேச்சை அது அப்படியே கேட்கும். முன்னாடி போன்னா முன்னாடி போகும், பின்னாடி வர சொன்னா வரும், இடது-வலதுன்னு நாம கொடுக்கிற கட்டளைப்படி அது நடக்கும். ஒருவேளை, அந்த கார் நம்ம பேச்சை கேட்காம அது பாட்டுக்கு கண்டமேனிக்கு ஓடுச்சுன்னா, நமக்கு அது பிடிக்காம போயிடும்.

உண்மையை சொல்லப்போனா, இன்னைக்கு நம்ம வாழ்க்கை முழுக்கவே இப்படிப்பட்ட கட்டளைகளால (Commands) தான் இயங்குது. உதாரணத்துக்கு:

- **தேர்வுகள்:**

எக்ஸாம் எழுதும்போது, அங்க என்ன கேள்வி கேட்டிருக்காங்களோ அதுக்குத்தான் பதில் எழுதணும். "எனக்கு இந்த கேள்விக்கு பதில் தெரியாது, அதனால எனக்கு தெரிஞ்ச வேற ஒரு பதிலை எழுதுறேன்" அப்படின்னு

சொன்னா மார்க் கிடைக்காது. அந்த கட்டளைப்படி தான் நாம நடக்கணும்.

- ### நவீன தொழில்நுட்பம் (AI):

இன்னைக்கு நாம AI மூலமா போட்டோ எடுக்குறோம், வீடியோ உருவாக்குறோம். இதெல்லாம் கரெக்டா வரணும்னா, நாம கொடுக்கிற Prompt (அதாவது நாம கொடுக்கிற கட்டளை) சரியா இருக்கணும். நாம சரியா சொன்னா தான், அது சரியான பலனைத் தரும்.

இதே மாதிரி தான் நம்ம வாழ்க்கையும். நாம உலகத்துல வாழ்றதுக்கும் சரி, ஆவிக்குரிய ரீதியா வாழ்றதுக்கும் சரி, தேவன் நமக்கு சில கட்டளைகளைக் கொடுத்திருக்கார். அதை நாம சரியா பின்பற்றினா மட்டும்தான், நம்ம வாழ்க்கை நமக்கும் பிடிச்ச மாதிரி இருக்கும், தேவனுக்கும் பிடிச்ச மாதிரி அமையும்.

ஆனா நாம என்ன பண்றோம்? உலகத்துல இருக்குற மத்த எல்லா ரூல்ஸையும் கரெக்டா ஃபாலோ பண்ற நாம, தேவன் கொடுத்த கட்டளைகளை மட்டும் நமக்கு ஏத்த மாதிரி மாத்திக்கப் பார்க்கிறோம். அப்படி செய்யக்கூடாது.

எபேசியர் 2:10-ல வேதம் சொல்லுது:

"நாம நற்கிரியைகளை செய்யணும் அப்படிங்கிறதுக்காகவே கிறிஸ்து இயேசுவுக்குள்ள தேவனால உருவாக்கப்பட்டிருக்கோம். நாம எப்படி நடக்கணும்னு அவர் முன்னாடியே திட்டம் போட்டு வச்சிருக்கார்."

தேவன் நம்மைக் கையால செஞ்ச ஒரு அழகான படைப்பு. எதுக்காக? அவருடைய கட்டளைப்படி நற்கிரியைகளைச் செய்யத்தான். அதனால, அந்த Remote Control Car எப்படி அதோட ஓனர் சொல்ற பேச்சை கேட்டு நடக்குதோ, அதே மாதிரி நாமளும் தேவன் கொடுத்த கட்டளைகளின்படி நடப்போம். அவருடைய பிள்ளைகளா வாழ்வோம்.

ஆமென்.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை

'ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்

முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்' (1 தெசலோனிக்கேயர் 4:16-17).

கிறிஸ்தவர்களாகிய நம்மில் சிலருக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும், எடுத்து கொள்ளப்படுதலுக்கும் (Rapture) வித்தியாசம் தெரிவதில்லை. ஒருவேளை யாருக்காவது தெரியவில்லை என்றால் சந்தேகத்தை தீர்த்து வைக்கவே இந்த கட்டுரையை எழுதுகிறோம்.

எடுத்து கொள்ளப்படுதல் (Rapture) என்பது, இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் அவரை விசுவாசிக்கிற அனைவரையும் பூமியிலிருந்து அவர் தம்மோடு கூட எடுத்து கொள்வதை குறிக்கிறது. இந்த சம்பவத்தை குறித்து, 1 தெசலோனிக்கேயர் 4:13-18 வரையும், மற்றும் 1கொரிந்தியர் 15: 50-54 உள்ள வசனங்களில் காணலாம். கர்த்தருக்குள் மரித்த ஒவ்வொருவரும் அந்த சமயத்தில் உயிர்த்தெழுவார்கள். அதன்பின் அவர்களோடுகூட உயிரோடிருக்கும் கர்த்தருடைய பிள்ளைகளும் எடுத்து

கொள்ளப்படுவார்கள். இச்சம்பவம் மிக வேகமாய் நடைபெறும். அதாவது ஒரு கண்ணிமைக்கும் நேரத்தில், ஒரு நொடிப்பொழுதில் நாம் மறுரூபமாகி விடுவோம். கர்த்தரோடு எடுத்து கொள்ளப்படுவோம்.

கிறிஸ்துவின் இரண்டாவது வருகை என்பது, கிறிஸ்து தமது பகைஞனாகிய அந்திகிறிஸ்துவை அழிப்பதற்காக வருவதாகும். அந்திகிறிஸ்துவை பாதாளத்தில் சங்கிலிகளால் கட்டிவிட்டு, கிறிஸ்து 1000வருடம் இந்த உலகத்தில் எருசலேமை தலைநகராக கொண்டு ஆளுகை செய்வார். இது ஆயிரவருஷ அரசாட்சி என்று கூறப்படுகிறது. இந்த இரண்டாம் வருகையை குறித்து, வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரம், 11-16 வரை உள்ள வசனங்களில் நாம் காணலாம்.

எடுத்து கொள்ளப்படுதல் (Rapture) அல்லது கிறிஸ்துவின் இரகசிய வருகைக்கும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் சில முக்கிய வித்தியாசங்கள் உண்டு. அவற்றை நாம் காண்போம்:

1. எடுத்து கொள்ளப்படும்போது, விசுவாசிகள் மத்திய ஆகாயத்தில் இயேசுகிறிஸ்துவோடு கூட சேர்ந்து கொள்வார்கள் (தெசலோனிக்கேயர் 4:17) இரண்டாம் வருகையில் விசுவாசிகள், கர்த்தரோடு கூட பூமிக்கு இறங்கி வருவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 19:14).

2. இரண்டாம் வருகை மகா உபத்திரவ காலம் முடிந்தவுடன் நடக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 6-19 அதிகாரங்கள்). இதை நோவாவின் காலத்திற்கு ஒப்பிட்டு கூறுவார்கள். எப்படியெனில் நோவா, ஜலப்பிரளயம் வந்து, பூமியை அழித்தபோது, எப்படி நோவாவும் அவருடைய குடும்பமாகிய எட்டு பேர் மாத்திரம் காக்கப்பட்டார்களோ, அப்படி உபத்திரவ காலத்திலும் இஸ்ரவேலரில் ஒரு பகுதியினர் காக்கப்படுவார்கள். எடுத்து கொள்ளப்படுதல் உபத்திரவ காலத்திற்கு முன் நடக்கும் (1தெசலோனிக்கேயர் 5:9, வெளிப்படுத்தின விசேஷம் 3:10). இதை ஏனோக்கோடு ஒப்பிட்டு கூறுவார்கள். எப்படி ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்து கொண்டிருந்தபோது எடுத்து கொள்ளப்பட்டாரோ, அப்படியே

விசுவாசிகளும் எடுத்து கொள்ளப்படுவார்கள்.

3. எடுத்து கொள்ளப்படுதல் ஒரு கணத்திலே, ஒரு கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து விடும் (1கொரிந்தியர் 15:50-54). இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையோ எல்லாருடைய கண்களுக்கு முன்பாக இருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 1:7, மத்தேயு 24:29-30)

4. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, வேதத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின பின்பே இருக்கும் (2 தெசலோனிக்கேயர் 2:4, மத்தேயு 24:15-30, வெளிப்படுத்தின விசேஷம் 6-18). ஆனால் எடுத்துகொள்ளப்படுதலோ எப்போது வேண்டுமானாலும் உடனடியாக இருக்கும். (தீத்து 2:13, 1தெசலோனிக்கேயர் 4:13-18).

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், இரகசிய வருகையாகிய எடுத்து கொள்ளப்படுதலும் ஒன்றாக இருப்பதை போன்று இருந்தாலும், இரண்டு சம்பவங்களும் வெவ்வேறானவை. அதை நாம் முற்றிலும் சரியாக அறிந்திருக்க வேண்டும். கர்த்தரின் இரகசிய வருகையான எடுத்து கொள்ளப்படுதலுக்கு

எந்த நேரத்திலும் நாம் ஆயத்தமாகி காத்திருக்க வேண்டும். அப்போது அவர் வரும்போது, ஒரு நொடிப்பொழுதிலே மறுரூபமாகி அவரோடு என்றென்றும் இருப்போம். ஆமென் அல்லேலூயா!

ஜெபம்: எங்களை அதிகமாய் நேசித்து வழிநடத்தும் எங்கள் நல்ல தகப்பனே, கிறிஸ்துவின் வருகை மிக சமீபமாய் இருக்கிறபடியால், நாங்கள் எந்த நேரத்திலும் ஆயத்தமாய் இருக்கவும், அவரை எதிர் கொண்டு வரவும் எங்களை ஆயத்தப்படுத்தும். கிறிஸ்துவின் இரகசிய வருகையில் நாங்கள் காணப்பட எங்களை கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி, பாவமில்லாத வாழ்க்கை செய்ய எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் ஜெபத்தை கேட்டு எங்களுக்கு பதில் கொடுப்பவரே உமக்கே நன்றி. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் ஜீவனுள்ள நல்ல பிதாவே ஆமென்.

Anudhina Manna Team

www.Anudhina Manna.net

வேதாகம விடுகதைகள்:

எழுத்துக்களை வரிசைப்படுத்தி சரியான வேதத்தில் உள்ள புத்தகங்களைக் கண்டுபிடிக்கவும்:

1. *க ம் ம யா தி ஆ*
2. *த ம் ங் கீ ச*
3. *ப ல் த் த டு ளி வெ ப்*
4. *ப ல் ம் பு ல*
5. *யு த் ம தே*
6. *கா லூ க்*
7. *கா மீ*
8. *கூ க் ப ஆ*
9. *து த் தீ*
10. *யா ப ஒ தி*

வேதாகம விடுகதைக்கான விடை அனுப்பியவர்கள்

1) **Sis. ராகேல் ஜெயப்பழம் விசுவாசபுரம்.**
2) **Sis.அபிஷ்டன், மும்பை.**
3) **Sis.ரெஜினா மேரி, கோயம்புத்தூர்.**
4) **Sis. ஸ்டெல்லா ராணி தேவஅருள் ஞானமணி, விசுவாசபுரம்.**
5) **Sis. சுகந்தி தூத்துக்குடி.**
6) **Sis. ஜெயபாக்கியம், மெஞ்ஞானபுரம்.**
7) **Sis. சாரோன், மும்பை.**
8) **Sis. காந்திமதி, வேலூர்.**

வேதாகம போட்டி 077

(1 யோவான் 1-5, சங்கீதம் 131–135)

1. நாம் “பாவம் செய்யவில்லை” என்று சொன்னால் என்ன ஆகும்?

2. பாவங்கள் எதினிமித்தம் மன்னிக்கப்பட்டுள்ளன

3. அன்பு என்ன என்பதை நாம் எதனால் அறிந்திருக்கிறோம்?

4. தேவனிடத்தில் அன்புகூருகிறவன் ____ அன்புகூரவேண்டும்.

5. ________________ என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்.

6. ______________ உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

7. என் ஆத்துமா எப்படி இருக்கிறது?

8. கர்த்தர் எதை தெரிந்துகொண்டு அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார்?

9. சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எப்படி இருக்கிறது?

10. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் எங்கிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக?

11. எருசலேமில் வாசம்பண்ணுகிற கர்த்தருக்கு எங்கிருந்து ஸ்தோத்திரமுண்டாவதாக?

விடைகளை அடுத்த மாதம் 14-ம் தேதிக்குள் (14th March 2026)

+91 7092 470757 என்ற Whatsapp எண்ணிற்கு அனுப்பவும்.

வேதாகம போட்டி 076 சரியான விடை அனுப்பியவர்கள்

1) **Sis. ராகேல் ஜெயப்பழம் விசுவாசபுரம்**
2) **Sis. ரெஜினா மேரி, கோயம்புத்தூர்.**
3) **Sis. ஸ்டெல்லா ராணி தேவஅருள் ஞானமணி, விசுவாசபுரம்.**
4) **Sis. சுகந்தி, தூத்துக்குடி.**
5) **Sis. ஜெயபாக்கியம், மெஞ்ஞானபுரம்.**
6) **Sis. பெசல்யா, மும்பை.**
7) **Sis. காந்திமதி வேலூர்**
8) **Bro. கிருபா காட்வின், மெஞ்ஞானபுரம்.**
9) **Sis. ஜென்சி, மெஞ்ஞானபுரம்.**
10) **Sis. ஜெயப்பிரவீனா, தூத்துக்குடி.**
11) **Sis. ரமணி தேவி துரைசிங், போரூர்.**

யுத்தக்குதிரை மாத இதழுக்கு விடை அனுப்பியமைக்கு நன்றி.தொடர்ந்து வாசிக்கவும். விடை அனுப்பவும். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

பொதுவான சில ஜெபக்குறிப்புகள்:

- நம்முடைய தேச தலைவர்களுக்காக, தேசத்தின் நலனுக்காக ஜெபிப்போம்.
- இந்திய தேசம் இன்னும் அதிகமாக இயேசு கிறிஸ்துவை அறிய, சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.
- ஒவ்வொரு சபை ஊழியர்கள், போதகர்கள், மிஷினரிகளுக்காக ஜெபிப்போம்.
- மருத்துவத்துறை, காவல் துறை, துப்புரவுத்துறை, கல்வித் துறையில் இருப்பவர்களுக்காகவும், அவர்களுடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

- ❖ பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறைய, பெண்களுடைய பாதுகாப்பிற்காக பாரத்தோடு ஜெபிப்போம்.
- ❖ போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பவர்கள், அதில் இருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.
- ❖ கேன்சர், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோருக்காகவும், அவர்களுடைய குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.
- ❖ கண் பார்வை குறைவுபட்டோர், காது கேட்கும் திறன் பாதிக்கப்பட்டோர், வாய் பேச முடியாதவர்கள், கை, கால்கள் பெலகீனப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம்.
- ❖ விசுவாசிகள் இன்னும் கர்த்தரில் வளர ஜெபிப்போம், கர்த்தரை விட்டு பின்மாறி போய்விடாதபடிக்கு பாரத்தோடு ஜெபிப்போம்.
- ❖ மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
- ❖ படிக்கின்ற பிள்ளைகளுக்காக, போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிற மாணவர்களுக்காக, வேலைக்கு செல்பவர்களுக்காக, வேலை தேடுபவர்களுக்காக ஜெபிப்போம்.
- ❖ திருமண காரியங்களுக்கு காத்திருப்பவர்களுக்காக ஜெபிப்போம். குழந்தை இல்லாதவர்களுக்கு கர்ப்பத்தின் கனி சீக்கிரமாக கிடைக்க அதிக பாரத்தோடு ஜெபிப்போம்.
- ❖ கருணை இல்லங்கள், அநாதை இல்லங்களில் இருக்கின்ற ஒவ்வொருவருக்காகவும் ஜெபிப்போம்

- முதியவயதில் இருக்கின்றவர்களுக்காகவும், அவர்களுடைய உடல்நலத்திற்காகவும் ஜெபிப்போம்.

இந்த PDF வாசித்த உங்கள் ஒவ்வொருவரையும் தேவாதி தேவன் ஆசீர்வதிப்பாராக. இந்த மாதத்தின் செய்திகளும், வேதாகம சிந்தனைகளும் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருந்திருக்கும் என நம்புகிறேன். இந்த சிறிய பணி எல்லா மாதமும் தொடர எனக்காக ஜெபிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்புக்கு: +91 7092 470757 என்ற Whatsapp எண்ணில் தொடர்பு கொள்ளவும்.